## கடையநல்லூரில் சிறப்பாக தேர்தல் பணியாற்றிய முன்னாள் ராணுவ வீரர்கள் மற்றும் காவல்துறையினருக்கு விருந்து



**கடையநல்லூர் ஏப் 23:**

கடையநல்லூரில் பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு புளியங்குடி சப் டிவிஷனுக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பாக தேர்தல் பணியாற்றிய முன்னாள் ராணுவ வீரர்கள் ஓய்வு பெற்ற காவலர்கள் மற்றும் காவல்துறையினருக்கு மதிய உணவு வழங்கி காவல் துறை சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

தமிழ்நாடு முழுவதும் கடந்த 19ம் தேதி பாராளுமன்ற உறுப்பினருக்கான தேர்தல் நடந்தது. தேர்தலில் போட்டியிடும் பல்வேறு அரசியல் கட்சி வேட்பாளர்கள் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு வந்தனர். இதனை தொடர்ந்து கடந்த 19ம் தேதி பாராளுமன்ற உறுப்பினரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடந்தது. இந்த தேர்தல் பணியில் காவல்துறை சார்பில் முன்னாள் ராணுவ வீரர்கள் ஓய்வு பெற்ற காவலர்கள் மற்றும் காவல் துறையினர் நூற்றுக்கணக்கானோர் பணியமர்த்தப்பட்டிருந்தனர். இந்த பணிகளை சிறப்பாக மேற்கொண்ட முன்னாள் ராணுவத்தினர் மற்றும் ஓய்வு பெற்ற காவலர்கள் மற்றும் காவல் துறையினரை பாராட்டி மாவட்ட எஸ்.பி. சுரேஷ் குமார், புளியங்குடி டி.எஸ்.பி. வெங்கடேசன் ஆலோசனையின் படி புளியங்குடி சப்டிவிஷனுக்குட்பட்ட முன்னாள் ராணுவத்தினர் மற்றும் காவல் துறையினருக்கு கடையநல்லூர் இன்ஸ்பெக்டர் ராஜா மதியம் அறுசுவை விருந்து வழங்கி பாராட்டுகளை தெரிவித்தார்.

## இலங்கைக்கு கடத்த முயன்ற ரூ.20 லட்சம் மதிப்புள்ள பீடி இலைகள் பறிமுதல் - ஒருவர் கைது

**தூத்துக்குடி.ஏப்.23.**

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட காயல் பட்டினம் கடற்கரையில் க்யூ பிரிவு காவல் ஆய்வாளர் விஜய அனிதா தலைமையில் உதவி ஆய்வாளர் ஜீவமணி தர்மராஜ் சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்பையா தலைமை காவலர் ராமர், மணிகண்டன், இருதயராஜ், காவலர் பழனி, பாலமுருகன் ஆகியோர் அதிகாலை ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, கடற்கரையில் நிறுத்தியிருந்த பைபர் படகில் சோதனை செய்தபோது, அதில் 30 கிலோ வீதம் 80 மூட்டைகளில் பீடி இலைகள் சட்டவிரோதமாக இலங்கைக்கு கடத்த முயன்றது தெரியவந்து. இதையடுத்து சுமார் 2500 கிலோ பீடி இலைகளை படகுடன் போலீசார் பறிமுதல் செய்தனர். இதன் மதிப்பு ரூ.20லட்சம் ஆகும். இது தொடர்பாக திரேஸ்புரத்தைச் சேர்ந்த அந்தோணிசாமி மகன் அந்தோணி துரை (52) என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



செங்கோட்டை அருள் தரும் அன்னை ஸ்ரீகாளி அம்மன் கோவில் சித்திரை திருவிழா ஏழாம்நாள் சிறப்பு அலங்காரம்

## இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளியில் தாய்மை தின கொண்டாட்டம்



**குற்றாலம் ஏப்.23:**

இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளியில் தாய்மை தின கொண்டாட்டம் தொடக்கநிலை பிரிவு மாணவர்களால் காலை இறைவழிபாடு கூட்டத்தில் கொண்டாடப்பட்டது. பள்ளி குழும தலைவர் மோகன கிருஷ்ணன் செயலாளர் காந்திமதி மோகன கிருஷ்ணன் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். முதல்வர் வனிதா முன்னிலை வகித்தார். மாணவன் நிவேதன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். மாணவி கார்த்திகா குழுவினர் இறைவணக்கப் பாடல் பாடினர். மாணவி சலீனா அன்றைய நிகழ்ச்சிக்கான தலைப்பு செய்தியை வாசித்தார். மாணவ ரயான் தாய்மை பற்றிய உரை நிகழ்த்தினார். மாணவி துவித்தி குழுவினர் தாய்மை பற்றிய பாடலுக்கு நடனம் ஆடினர். மாணவன் சூர்யா தாய்மையின் மகத்துவம் பற்றிய கவிதை கூறினார். மாணவி அங்கிதா மற்றும் வசந்த ரக்ஷனா தங்கள் பெற்றோருக்கு அளித்த பரிசினை பற்றி எடுத்துக் கூறினார். இந்நிகழ்ச்சிக்கு பள்ளி குழும தலைவர் மோகனகிருஷ்ணன் செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## இலஞ்சி திருவிலஞ்சி குமாரர் கோவிலில் சித்திரை திருவிழா தேரோட்டம்: பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம்



**தென்காசி, ஏப் :- 23 :**

தென்காசி மாவட்டம் குற்றாலம் அருகே உள்ள இலஞ்சியில் உள்ள திருவிலஞ்சி குமாரர் கோவிலில் சித்திரை திருவிழா வெகு சிறப்பாக நடைபெறுவது வழக்கம்.

இந்த வருடத்திற்கான சித்திரை திருவிழா கடந்த 14 ஆம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கி நடைபெற்று வருகிறது. விழாவின் ஒவ்வொரு நாளும் திருவிலஞ்சிகுமாரர் சிறப்பு அலங்காரங்களில் பக்தர்களுக்கு காட்சியளிக்கும் திருவீதி உலா வரும் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் ஒன்பதாம் திருவிழாவான நேற்று தேரோட்டம் நேற்று வெகு விமர்சையாக நடைபெற்றது. குறிப்பாக 30 வருடங்களுக்கு பின் செய்யப்பட்ட புதிய தேரில் வள்ளி, தெய்வானையுடன் திருவிலஞ்சி குமாரர் எழுந்தருளினர். புதிய தேரினை பக்தர்கள் வடம் பிடித்து இழுத்தனர். தொடர்ந்து சுவாமி அம்பாள் எழுந்தருளிய மற்றொரு தேரையும் பக்தர்கள் வடம் பிடித்து இழுத்து சுவாமி தரிசனம் செய்தனர்.

மேலும் 10ஆம் திருவிழாவான இன்று தீர்த்தவாரி, தீபாராதனை மற்றும் பல்லக்கு வீதி உலா நடைபெறுகிறது. விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாக அதிகாரி சுசிலாராணி, மண்டக படிதாரர் ஆறுமுக பாண்டியன், இளைப்பாறு மண்டகப் படிதாரர் பரமசிவன், பட்டர்கள் ரமேஷ், ஹரி, மற்றும் கோயில் பணியாளர்கள் செய்திருந்தனர்.

தேரோட்டத்தில் திமுக இளைஞரணி அமைப்பாளர் டி ஆர் கிருஷ்ணராஜா, இலஞ்சி பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் இலஞ்சி முத்தையா, மயில்வேலன், அதிமுக சண்முகசுந்தரம், செங்கோட்டை மாரி, வல்லம் செந்தில், முத்து, திருஇலஞ்சிகுமரன் உள்ளிட்ட அனைத்து சமுதாய தலைவர்கள், உறுப்பினர்கள், மண்டகப்படிதாரர்கள், முருக பக்தர்கள், சிவனாடியார்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். குற்றாலம் காவல்துறையினர் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.



**தென்காசி தொகுதியில் பிரச்சாரம் செய்த திமுக மாநில மகளிர் அணி அமைப்பாளர் கனிமொழியை தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் நேரில் சந்தித்து பொன்னாடை வழங்கி நன்றி தெரிவித்தார்.**

## தொடுவானம் கலை இலக்கிய பேரவை சார்பில் நூல் வெளியீட்டு விழா



**கோவில்பட்டி ஏப் 23**

தொடுவானம் கலை இலக்கிய பேரவை மற்றும் காட்சில்லா கலைக்கூடம் பதிப்பகம் இணைந்து பாராட்டு விழாவும், நூல்வெளியீட்டு, மற்றும் குறும்படம் திரையிடலும் நடத்தியது சக்திவேல் தலைமை வைத்தார். சாகித்ய அகாடமியின் பாலப் புரஸ்கர் மற்றும் தமிழ்நாடு அரசின் தமிழ் செம்மல் விருது பெற்ற எழுத்தாளர் உதயசங்கர், ஆதலின் பொம்மை நூல் ஆய்வு கவிஞர் தங்கதுரைஅரசி, கவிஞர் நெல்லைதேவனின் ஜோக்கா சிரிங்க நகைச்சுவை தொகுப்புநூல் ஆகியவற்றை உதயசங்கர் வெளியிட்டார்.

முதல்படியை கோவில்பட்டி காமராஜ் மெட்ரிகுலேசன் பள்ளி முதல்வர் பிரபு ஜாய் பெற்றுக் கொண்டார். குறும்படத்தை வ.உ.சி. கல்லூரி முன்னாள் பேராசிரியர் பால மணிவண்ணன் தொடங்கிவைத்து வாழ்த்துரை வழங்கினார். பத்மநாதன் நன்றி கூறினார். நிகழ்ச்சியை தொடுவானம் கலை இலக்கியப் பேரவை தலைவர் கவிஞர். நெல்லைதேவன் மற்றும் செயலாளர் கவிஞர். மாரிமுத்து ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

## இலவச கண் சிகிச்சை முகாம்

**சங்கரன்கோவில், ஏப்.23-**

சங்கரன்கோவில் வீரமாமுனிவர் தமிழ் சித்த மருத்துவ மனை வளாகத்தில் அமைந்துள்ள விண்மீன் இல்லத்தில் உள்ள ஆதரவற்ற மற்றும் மாற்றுத்திறனாளிகளான பெண் குழந்தைகளுக்கு ரவி மருத்துவமனை, ரவி கண் மருத்துவமனை மற்றும் உதவும் கரங்கள் அமைப்பு இணைந்து நடத்திய பொதுநலம் மற்றும் கண் பரிசோதனை சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.இதில் ரவி மருத்துவமனையின் பொதுநல மருத்துவர் ரவிசந்திர பிரகாஷ், ரவி கண் பருத்துவமனையின் தலைமை கண் மருத்துவர் கவிதா ஆகியோர் பங்கேற்றார்கள்.இந்நிகழ்வுக்கு சுற்றுசூழல் ஆர்வலர் மாரிமுத்து வரவேற்புரையாற்றினார். தொடர்ந்து மருத்துவர்கள் மாற்றுத்திறனாளிகளான பெண் குழந்தைகளுக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் கண் பரிசோதனை மேற்கொண்டனர். உதவும் கரங்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து நன்றியுரை ஆற்றினார்.

## பூக்களின் உதிர்வை தடுக்கும் தேமோர் கரைசல் குறித்து செயல்முறை விளக்கம்



**தென்காசி ஏப்.23:**

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் வட்டாரம் கருங்குளம் அய்யனார் கோவில் பகுதியில் உள்ள சுப்பையா பாண்டியனின் மல்லிகை தோட்டத்தில், கிள்ளகுளம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயின்று வரும் மாணவிகள் ரக்ஷனா மற்றும் சௌமியா. அதே மோர் கரைசல் பற்றிய செயல்முறை விளக்கம் அளித்தனர். இக்கரைசலில் உள்ள சைடோசென் என்ற அமிலம் பூ உதிர்வை கட்டுபடுத்துகிறது. இது இயற்கை முறையில் பூ உதிர்வை தடுப்பதால் இயற்கை வேளாண்மைக்கு பயனுள்ளதாக இருக்கும்.இக்கரைசலை பூ செடிகள் மட்டுமல்லாது அனைத்து வகையான காய்கறி செடிகளுக்கும் பயன்படுத்தலாம்.

தேமோர் கரைசல் செயல்முறை: தேமோர் கரைசல் என்றால் தேங்காய் பால் மற்றும் மோர் கலந்த கரைசலாகும். 3 அல்லது 4 நாட்கள் புளித்த மோர் ஒரு லிட்டருடன் ஒரு லிட்டர் தேங்காய் பால் சேர்த்து நன்கு கலந்து கொள்ள வேண்டும்.பின்பு அக் கரைசலை நிழலான பகுதியில் ஒரு வார காலம் வரை வைக்க வேண்டும்.பின்பு நன்கு புளித்த நுரை கட்டிய கரைசலை பூக்கள் உதிரும் செடிகளுக்கு பயன்படுத்தலாம்.இக் கரைசளை இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை தெளிக்க வேண்டும்.

தேமோர் கரைசலின் பயன்கள்: பூக்களின் உதிர்வை கட்டுப்படுத்தும், பூக்களின் எண்ணிக்கை அளவு அதிகரிக்கும், மண் வளத்தை மேம்படுத்தும், நுண்ணுயிர் பெருக்கத்தை அதிகரிக்கும், செடி நன்கு செழிப்பாக வளர பயன்படும்.

## குத்துக்கல்வலசை பஞ்சாயத்தில் தினமும் குப்பைகள் அள்ளப்படுமா? பொதுமக்கள் எதிர்பார்ப்பு



தென்காசி ஏப்.23

தென்காசி மாவட்டம் குத்துக்கல்வலசை பஞ்சாயத்திற்குட்பட்ட பகுதியில் தூய்மைப் பணியாளர்களுக்கான சம்பளம் சரிவர வழங்கப்படாததால் அவர்கள் வீடுகள் மற்றும் அனைத்துப் பகுதிகளிலும் வாரம் ஒருமுறை மட்டுமே குப்பை சுழற்சி முறையில் எடுத்துச் செல்கின்றனர். மற்ற நாட்களில் குப்பைகள் அள்ளப்படாமல் வீதியோரங்களில் குப்பைகளை வீசி செல்கின்றனர்.

இதனால் துர்நாற்றம் வீசுவதோடு நோய்பரவும் அபாயமும் உள்ளது. இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களும் விரும்புகின்றனர். நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என பொதுமக்கள் விரும்புகின்றனர்.

## இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் ராமநவமி சிறப்பு பூஜை



**குற்றாலம் ஏப்.23:**

இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் இராம நவமி சிறப்பு பூஜை நடைபெற்றது. இந்நிகழ்விற்கு கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் தலைமை வகித்தார். ஆசிரியர்களும், மாணவர்களும் இணைந்து இராம நாமத்தை கூறி தியானம் செய்தனர். மாணவன் நரேன் இராமநவமி அஷ்டோத்தரத்துடன் பூஜை செய்தார். இறுதியாக அனைவருக்கும் நீர் மோர் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதாபிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

## கோவில்பட்டி உண்ணாமலை கல்லூரியில் குடிமக்கள் நுகர்வோர் மன்ற துவக்க விழா




கோவில்பட்டி ஏப் 23

கோவில்பட்டி உண்ணாமலை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் குடிமக்கள் நுகர்வோர் மன்ற துவக்க விழா தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு குழுவின் தலைவர் சுப்பிரமணியம் சிறப்புரையுடன் துவங்கப்பட்டது.

முன்னதாக துவக்க உரையை இம்மன்ற திட்ட அலுவலர் லாவண்யா நிகழ்த்த அதனை தொடந்து கல்லூரி முதல்வர் முனைவர் சுப்புராஜ் தலைமையுரையில் இன்றைய சூழலில் நுகர்வோர் விழிப்புணர்வின் அவசியம் குறித்து பல எடுத்துக் காட்டுகளுடன் எடுத்துரைத்தார். இம்மன்றத்தின் தூத்துக்குடி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. விஜயன் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

மேலும் நுகர்வோர் விழிப்புணர்வு தொடர்பான கலை நிகழ்ச்சிகளை கன்னியாகுமரி மாவட்ட நுகர்வோர் மன்ற ஒருங்கிணைப்பாளர் திருமதி லூர்து மேரி மாணவ மாணவிகளுக்காக ஏற்பாடு செய்து நடத்தினார்.

இவ்விழாவில் கன்னியாகுமரி மாவட்ட நுகர்வோர் மன்ற மாவட்ட செயலாளர் திரு. மெல்கியாக்ஷ் சிறப்பு செய்திருந்தார். இறுதியாக ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியை திருமதி ஜெயலட்சுமி நன்றியுரையுடன் இனிதே நிறைவுற்றது. இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி தாளாளர் விஜயன் அவர்களின் ஆலோனையின் பேரில் இம்மன்றம் துவங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அனைத்து துறை பேராசிரியர்கள் மற்றும் 450க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.


### தவறிவிட்டது

கடந்த 26.02.24 அன்று கீதாலயா தியேட்டர் சாலையில் உள்ள ஜெராக்ஸ் கடை அருகில் வைத்து எனது பைக்கின் முன்புற டேங்க் கவரில் வைத்திருந்த எனக்கு பாத்தியப்பட்ட ஒரிஜினல் பாகப்பிரிவினை ஆவணம் எண். 3354/2010 (கரிவலம்வந்தநல்லூர் சப்ரி அலுவலகம்) வைத்திருந்த பை காணாமல் போய்விட்டது. கண்டு எடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரியில் கொடுத்து உதவ வேண்டுகிறேன்.

க. கருத்தப்பாண்டியன்,
த.பெ. கருப்பையா,
க.எண். 38/15, திரு.வி.க. புதுத்தெரு,
சங்கரன்கோவில் - 627756 .
செல். 9486133449.

### காணவில்லை

நான் கடந்த 15.04.2024 அன்று கரிவலம்வந்தநல்லூர் மெயின் ரோட்டில் பைக்கில் சென்று கொண்டிருந்தபோது முன்புறம் வைத்திருந்த எனது ஒரிஜினல் பாஸ்போர்ட் எண். B 6432629 (Madurai office) இருந்த பை காணாமல் போய்விட்டது.இதனைக் கண்டு எடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்க வேண்டுகிறேன்.

செ.செல்வராஜ்,
த.பெ. பெருமாள்சாமி,
க.எண். 4/205, மேலத்தெரு,
ரெட்டியபட்டி, பந்தப்புளி அஞ்சல்,
சங்கரன்கோவில் -வட்டம்.
செல் நம்பர் : 7010101752.

### பொதுக்குழு கூட்ட அறிவிப்பு

**அரியநாயகிபுரம் இந்து நாடார் உறவின்முறைக் கமிட்டி உயர் துவக்கப்பள்ளி சங்கம்**

(பதிவு எண்.13/64)

அரியநாயகிபுரம் இந்து நாடார் உறவின்முறைக் கமிட்டி உயர் துவக்கப்பள்ளி சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் சங்க உபவிதிகளின்படி எனது தலைமையில் நமது அரியநாயகிபுரம் இந்து நாடார் உறவின்முறைக் கமிட்டி மேல்நிலைப் பள்ளி கட்டிட வளாகத்தில் வைத்து 23.05.2024 வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்படி பொதுக்குழு கூட்டத்தில்

1. சங்க உறுப்பினர்கள் நீக்கம் சம்பந்தமாகவும்
2. சங்கத்திற்கு புதிய நிர்வாகிகளை தேர்வு (2024–2027) செய்தல் சம்பந்தமாகவும்,
3. 2021–22, 2022–23 மற்றும் 2023–24ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை வாசித்து ஒப்புக்கொள்வது சம்பந்தமாகவும், தீர்மானம் கொண்டு வரப்படஉள்ளது.

மேற்படி பொதுக்குழு கூட்டத்திற்கு சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர்
அரியநாயகிபுரம் இந்து நாடார் உறவின்முறை கமிட்டி உயர்துவக்கப்பள்ளி சங்கம்
நாள்: 23.4.2024 பதிவு எண்.13/64

### ENROLMENT NOTICE

After ten days of the publication of this notice and within three months, thereafter I, MUGESH PANDIAN.K, S/o. KANTHIAH.V, aged 24 years, permanently residing at 237, 11th Main Road, Sivagiri, Sivagiri (Taluk), Tenkasi (District), Pin - 627757. Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamilnadu and Puducherry, Bar Council Buildings, High Court Campus, Chennai - 104.

Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

MUGESH PANDIAN.K

### ENROLMENT NOTICE

After ten days of the publication of this notice and within three months, thereafter I, K.ESAKKI SIBIYA, D/o. M.KAIKONDAN, aged 24 years, permanently residing at 30B, Padisamy Kovil Street, Keelapavoor, Tenkasi District Pin - 627806. Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamilnadu, Bar Council Buildings, High Court Campus, Chennai - 104.

Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

K.ESAKKI SIBIYA

### தவறிவிட்டது

நான் 08-04-2024 அன்று வீரசிகாமணிக்கு பஸ்ஸில் வந்து கொண்டிருந்தபோதுசங்கரன்கோவில் சார் பதிவாளர் அலுவலகத்தில் எனது தந்தை முத்தையா கோனார் என்ற அருள்தாஸ் பெயரில் பதிவு செய்யப்பட்ட ஒரிஜினல் பத்திரம் எண் 1831/1944 தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் எனது முகவரிக்கு தெரிவிக்கவும்

சாலமோன்,
1/83 B, வடக்கு தெரு,
கே.வி.ஆலங்குளம்.
கீழ வீரசிகாமணி,
சங்கரன்கோவில் தாலுகா - 627862
9976927929

### கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம், தென்காசி,

இ.ப.வ.எண். 76/2024

S.S.T. மாரியப்பன்,
த.பெ. திருமலையாண்டி ஆசாரி,
க.எண். 6, சண்முகம் தெரு,
புளியங்குடி,
கடையநல்லூர் வட்டம்,
மனுதார்,

எதிர்,

ஆணையாளர் ,
நகராட்சி அலுவலகம்,
புளியங்குடி,
எதிர்மனுதாரர்,

அறிவிப்பு

எனது தாயார் சுப்பம்மாள், க.பெ. திருமலையாண்டி ஆசாரி, என்பவர் கடந்த 26.12.1999 அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 7 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

S.S.T. மாரியப்பன்,
புளியங்குடி.

### கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி

பால்பாண்டியன், தபெ.
சண்முகம்,
கஎண்: 54/32(2),
குருவமுதலியார்தெரு,
நடுவிற்பட்டி, எட்டையாபுரம் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.
மனுதார்

எதிர்

வட்டாட்சியர், எட்டையாபுரம்.
சார்பதிவாளர், எட்டையாபுரம்.
எதிர்மனுதார்கள்

அறிவிப்பு

எனது தாயார் லட்சுமி கபெ. சண்முகம் என்பவர் கடந்த 14.01.2015. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்துமூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்து கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கபடுகிறது.

இப்படிக்கு
பால்பாண்டியன்,
மனுதார்.

### கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி

முருகானந்தம்,
தபெ. ராமகிருஷ்ணன் பிள்ளை,
கஎண்: 4/2, வடக்குதெரு,
மேலநம்பியாபுரம் கிராமம்,
எட்டையாபுரம் தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்.
மனுதார்

எதிர்

வட்டாட்சியர், எட்டையாபுரம்.
சார்பதிவாளர், எட்டையாபுரம்.
எதிர்மனுதார்கள்

அறிவிப்பு

எனது சித்தி ஆவுடைத்தங்கம் என்பவர் கடந்த 08.10.2014. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்துமூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்து கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கபடுகிறது.

இப்படிக்கு
முருகானந்தம்,
மனுதார்.



மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவு நிறைவடைந்ததையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை, அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம்தென்னரசு, தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ, தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் ஜெயபாலன், சட்டமன்ற உறுப்பினர் தங்கபாண்டியன், தென்காசி மக்களவை தொகுதி வேட்பாளர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார், ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

### தூத்துக்குடி அருகே

# மீன் பதப்படுத்தும் ஆலையை அகற்றக்கோரி போராட்டம் நடத்திய 50 பேர் மீது வழக்கு

தூத்துக்குடி.ஏப்.23.

தூத்துக்குடி அருகே பொட்டலூரணி கிராமத்தில் மீன் பதப்படுத்தும் ஆலைகளை அகற்றக்கோரி தேர்தலை புறக்கணித்து போராட்டம் நடத்திய 50பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தூத்துக்குடி அருகே பொட்டலூரணி அருகில் உள்ள மீன் பதப்படுத்தும் ஆலைகளை அகற்றக்கோரி, கிராம மக்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர். கோரிக்கையை வலியுறுத்தி, நாடாளுமன்ற தேர்தலை புறக்கணிப்பதாகவும் அறிவித்தனர். பொட்டலூரணியின் மொத்தம் 931 வாக்காளர்கள் உள்ளனர். இவர்களுக்காக அந்த கிராமத்தில் தனியாக வாக்குச்சாவடி அமைக்கப்பட்டது.

கடந்த 19-ம் தேதி காலையில் வழக்கம்போல் காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. ஆனால் வாக்காளர்கள் யாரும் வாக்களிக்க செல்லவில்லை. மக்கள் ஆங்காங்கே கருப்புக்கொடி கட்டி எதிர்ப்பு தெரிவித்தனர். பொதுமக்கள் எதிர்ப்பு காரணமாக வாக்குச்சாவடியை சுற்றிலும் போலீஸ் குவிக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட கிராம மக்களிடம் எஸ்பி பாலாஜி சரவணன் பேச்சுவார்த்தை நடத்தினார். ஓட்டுப்போட செல்பவர்களை யாரையும் தடுக்க கூடாது என்று அறிவுறுத்தினார்.

தொடர்ந்து பொட்டலூரணி கிராமத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் சென்றார்.அப்போது போராட்டத்தில் ஈடுபட்ட கிராம மக்கள், அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்த மறுத்துவிட்டனர். இதனால் அவர் திரும்பி சென்றார்.

இதற்கிடையே, பொட்டலூரணி வாக்குச்சாவடியில் உள்ள கட்சி முகவரை மாற்றுவதற்காக காரில் சிலர் வந்ததாக கூறப்படுகிறது. அப்போது போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அந்த காரை சிறைபிடித்தனர். உடனடியாக போலீசார், காரில் இருந்தவர்களை மீட்டு வேனில் ஏற்றினர். இதனால் அப்பகுதி மக்கள் அந்த வேனை முற்றுகையிட்டு போலீசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அப்போது, அந்த வேனின் கண்ணாடியை உடைத்து சேதப்படுத்தினர்.

போலீசார், வேனில் இருந்தவர்களை பத்திரமாக காவல் நிலையத்துக்கு அழைத்து சென்றனர். தொடர்ந்து பொட்டலூரணி கிராம மக்கள் தேர்தல் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுனர். மாலை வரை மொத்தம் வாக்குச்சாவடி பாதுகாப்பு பணிக்கு வந்த போலீசார், வாக்குச்சாவடி அலுவலர்கள் 20 பேரும், அந்த பகுதியை சேர்ந்த 9 பேரும் என மொத்தம் 29 பேர் மட்டும் வாக்குப்பதிவு செய்தனர்.

இந்தநிலையில், பொட்டலூரணி கிராமத்தில் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக போராட்டக்குழு தலைவர் சங்கரநாராயணன் உட்பட 50 பேர் மீது புதுக்கோட்டை போலீசார் இரண்டு வழக்குகளை பதிவு செய்தனர். எல்லநாயக்கன்பட்டி வி.ஏ.ஓ., விஜயமூர்த்தி புகாரின்படி இந்த வழக்குகள் பதியப்பட்டது.

இதேபோல, அந்த கிராமத்தை சேர்ந்த முத்தம்மாள் என்பவர் அளித்த புகாரின்படி, காரில் ஆயுதங்களுடன் வந்த மகாராஜன் (25), தங்கபாண்டி, (31), சித்திரைவேல் (26), ராமர் (24) உள்ளிட்ட 8 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். தேர்தலை புறக்கணித்த கிராம மக்கள் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

### தென்காசி மாவட்டத்தில்

# உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி வரும் 26ம் தேதி நடக்கிறது: கலெக்டர் ஏ.கே.கமல் கிஷோர் அறிவிப்பு

**தென்காசி ஏப்.23:**

தென்காசி மாவட்டத்தில் 2023 - 2024 ஆம் கல்வி ஆண்டில் உயர் கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை (26.04.2024) இ.சி.ஈ. ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில்நடைபெற உள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்தார்.

தென்காசி மாவட்டத்தில்2023 - 2024 ஆம் கல்வி ஆண்டில் உயர் கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை (26.04.2024) காலை 11.00 மணிக்கு இ.சி.ஈ. ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற உள்ளது. இந்த கல்வி ஆண்டில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு முடித்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தை சார்ந்த மாணவர்கள் மற்றும் மாணவியர்களுக்கு தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அதிகம் உள்ள கல்லூரி படிப்புகளை பயின்று பயன் பெறுவதற்காக தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலச் செயலகம் மற்றும் இயக்குநரகம் சென்னை அவர்களின் உத்தரவுக்கிணங்க *Mass Movement for Transformation (MMT) and NUTURE Bhel* என்ற தன்னார்வ அமைப்பின் கல்வியாளர்களின் நல் வழிகாட்டுதலுடன் நடைபெற இருப்பதால் 2023 - 2024 ஆம் கல்வி ஆண்டில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வு எழுதி தேர்ச்சி பட்டியல் வெளியீட்டிற்காக காத்திருக்கின்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் மற்றும் மாணவியர்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்துள்ளார்

# புளியங்குடி ஆண்டியப்ப நடுநிலைப் பள்ளியில் உலக பூமி தின கொண்டாட்டம்



தென்காசி ஏப்.23:

புளியங்குடி ஆண்டியப்ப நடுநிலைப்பள்ளியில் உலக பூமி தினம் கொண்டாடப் பட்டது. வட்டாரக் கல்வி அலுவலர் மாரியப்பன் தலைமை தாங்கினார். தலைமையாசிரியர் நேன்சி பொன்னீஸ்வரி வரவேற்புரை ஆற்றினார். நிலம், நீர், காற்று, ஆகாயம் என உலகமெங்கும் பரவி சுற்றுச்சூழல் முதல் மனிதர்களின் உடல் வரை வியாபித்துள்ள "பிளாஸ்டிக் துகள்" பற்றிய கருத்துகள் மாணவர்களிடையே எடுத்துக் கூறப்பட்டது. பிளாஸ்டிக் இல்லா உலகை படைக்க நாம் எடுத்து வைக்க வேண்டிய முன்னேற்பாடுகளைப் பற்றியும், அதனால் நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பற்றியும் கூறப்பட்டது. "பிளாஸ்டிக்கை ஒழிப்போம் நிலத்தடி நீர் பாதுகாப்போம்"

"மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்" "புவி வெப்பமயமாதலை தவிர்ப்போம் நபருக்கு ஒரு மரம் வளர்ப்போம் நன்னீர் பெறுவோம் நலமுடன் வாழ்வோம்" என்ற கருத்துக்கள் மாணவர்கள் மத்தியில் விதைக்கப்பட்டது. 2040 க்குள் "பிளாஸ்டிக் இல்லா உலகை நாம் உருவாக்குவோம் பிளாஸ்டிக் இனி பயன்படுத்தமாட்டோம்" என்ற உறுதி மொழியோடு கூட்டம் இனிதே நிறைவுற்றது

# தென்காசி பகுதியில் கிராமப்புற வேளாண்மை பயிற்சி தங்கப்பழம் வேளாண் கல்லூரி மாணவிகள் பங்கேற்பு



தென்காசி, ஏப்.23

தென்காசி பகுதியில் வாசுதேவநல்லூர் எஸ். தங்கப்பழம் வேளாண்மை கல்லூரி நான்காம் ஆண்டு மாணவிகள் கிராமப்புற வேளாண்மை பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தென்காசி மாவட்பம் வாசுதேவுநல்லூர் எஸ்.தங்கப்பழம் வேளாண்மைக் கல்லூரி முதல்வர் முனைவர் ஏ.ராமலிங்கம் மற்றும் உதவி பேராசிரியர்கள் முனைவர் ரிபா ஜாக்கப் முனைவர் அரவிந்த் வழிநடத்தலுடன் நான்காம் ஆண்டு பயின்று வரும் வேளாண் கல்லூரி மாணவிகள் மா.ரா.ராகவி, சு.ஜெயஸ்ரீ, ஜோ.சிந்து மோனிகா, மோ.அயறின் ஜெர்சி, கு.கௌசல்யா, பா.பாண்டிசெல்வி, ஆ.ம.ஹரினா, சு.ஹீன் ஜோஷ்னா, மா.ரா.ராகவி, செ.சுதர்சினி, ரா.இந்துஜா ஆகியோர் கொண்ட பத்து பேர் குழுவாக தென்காசியில் தங்கி 50 நாட்களுக்கு கிராமப்புற வேளாண்மை பயிற்சி அனுபவத்தில் ஈடுபட்டுள்ளனர். பயிற்சியின் முதல் நாளான 08.04.2024 அன்று தென்காசி வேளாண்மை அலுவலக நிலையத்தில் உள்ள வேளாண்மை உதவி இயக்குனர் ஜோதிபாசுவை சந்தித்து இக்கழுவின் செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடினர். தென்காசி உதவி வேளாண்மை அலுவலர் சிவக்குமார் தலைமையில் இக்குழு தங்களது வேளாண் பயிற்சியை தொடங்கியது.

இப்பயிற்சியின் தொடக்கமாக தென்காசி உழவர் சந்தை. ஒருங்கிணைந்த சந்தை போன்ற இடங்களுக்குச் சென்று விளைபொருள்களுக்கு உழவர்கள் விலை நிர்ணயம் செய்வது குறித்து அறிந்து கொண்டனர்.ஒன்பதாம் நாளான (16.04.2024) அன்று தென்காசி அருகே உள்ள கிளாங்காடு கிராமத்தில் பசுமை குடில் அமைத்து வேளாண்மை செய்து வரும் அனந்த வரதராஜனை சந்தித்தனர்.அந்த பசுமை குடிலில் மல்லிகை, செம்பருத்தி, தக்காளி, வெங்காயம் மிளகாய் போன்றவற்றை இயற்கை முறையில் வேளாண் செய்து உற்பத்தி செய்து வருகிறார். 500க்கும் மேற்பட்ட மல்லிகை செடிகளை 6 வருபங்களாக வளர்த்து வருகிறார். சொட்டு நீர் பாசனம் போன்ற நவீன முறைகள் குறித்து வேளாண் கல்லூரி மாணவிகளுக்கு பசுமை குடில் உரிமையாளர் அனந்த வரதராஜன் எடுத் து ரைத் தார்.மல் லிகையை தாக்கும் முக்கிய பூச்சிகளான த்ரிப்ஸ், வெள்ளை ஈ , மைமஸ் மற்றும் முக்கிய நோய்களான கருப்பூமடை நோய், இலை கருகல் நோய், போன்றவற்றை கையாளும் முறைகள் பற்றியும் மாணவிகளுக்கு விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைத்தார்.வடிக்கமான முறையில் விவசாயம் செய்வதைக் காட்டிலும் நவீ ன மு றை யில் வேளாண்மை செய்வதன் மூலம் அதிக மகசூலை அடைய முடியும் என்பதை பசுமைகுடில் பொறுப்பாளர் பிச்சைமணி விளக்கமாக எடுத்துரைத்தார்.இந்த கிராமப்புற வேளாண்மை பயிற்சியில் தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் எஸ் தங்கப்பழம் வேளாண் கல்லூரியின் நான்காம் ஆண்டு மாணவிகள் மா.ரா.ராகவி, சு. ஜெயஸ்ரீ, ஜோ. சிந்து மோனிகா,மோ.அயறின் ஜெர்சி, கு.கௌசல்யா, பா.பாண்டிசெல்வி, ஆ.ம.ஹரினா, சு.ஹீன் ஜோஷ்னா, மா.ரா.ராகவி, செ.சுதர்சினி, ரா.இந்துஜாஆகியோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் உலக புவி தினம் கொண்டாட்டம்




**குற்றாலம் ஏப்.23:**

இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் உலக புவி தினமானது சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியானது இறைவணக்கப் பாடலுடன் தொடங்கப்பட்டது. மாணவி சந்திய பிரியா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். இந்நிகழ்விற்கு கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் அவர்கள் தலைமை வகித்தார். மாணவி ரபியா சனா வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர் திரு.கருப்பையா அவர்கள் பூமியை பாதுகாக்கும் வழிமுறைகளையும் விவசாயத்தின் முக்கியத்துவத்தையும் சிறப்பாக கூறினார். பள்ளி முதல்வர் பாலசுந்தர் சிறப்பு விருந்தினருக்கு பொன்னாடை போற்றி சிறப்பு செய்தார். கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் மாங்கன்றை நினைவு பரிசாக வழங்கினார். மாணவி அபர்ணா, பூமி தினத்தை பற்றியும் பூமியை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பது பற்றியும் சிறப்பாக உரையாற்றினார். மேலும், மாணவிகள் ஒன்றாக இணைந்து பூமி என்ற சொல்லின் விளக்கத்தையும், பூமியை வளமையாக்கும் முறைகளையும் எடுத்துரைத்தனர். இறுதியாக மாணவி பாத்திமா தஸ்னம் நன்றியுரையாற்றினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகனகிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதா பிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.



**செங்கோட்டை விஸ்வநாதபுரம் பகுதியைச் சார்ந்த இன்பா அகில இந்திய சிவில் சர்வீஸ் 851 வது இடத்தை பெற்று வெற்றி பெற்று சென்னை சென்று திரும்பிய அவரை தென்காசி ரயில் நிலையத்தில் வைத்து பெரியபிள்ளைவலசை பஞ்சாயத்து தலைவர் வேலுச்சாமி, மாவட்ட கவுன்சிலர் பூங்கொடி மற்றும் ஊர்பொதுமக்கள் தெரிவித்து சிறப்பான வரவேற்பு அளித்தனர்.**

# ஊரக உள்ளாட்சி தேர்தல் முன்னேற்பாடு பணிகள் : மாநில தேர்தல் ஆணையர் ஆலோசனை



தூத்துக்குடி.ஏப்.23.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாநில தேர்தல் ஆணையர் ஜோதி நிர்மலா சாமி ஆலோசனை நடத்தினார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் காலியாக உள்ள ஊரக உள்ளாட்சி பதவியிடங்களுக்கு தேர்தல் நடத்துவது தொடர்பான முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடனான கலந்தாலோசனைக் கூட்டம் ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் ஜோதி நிர்மலா சாமி, தலைமையில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் கோ.லட்சுமிபதி முன்னிலையில் தடைபெற்றது. இக் கூட்டத்தில் ஊராட்சிகள் உதவி இயக்குநர், மகளிர் திட்ட இயக்குநர், நேர்முக உதவியாளர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கடையநல்லூர் நீலமணிநாத சுவாமி கோயில் பிரம்மோத்ஸவ விழா தேரோட்டம்



கடையநல்லூர் ஏப் 23:

கடையநல்லூர் அருள் மிகு கரிய மாணிக்க பெருமாள் என்றழைக்கப்படும் நீலமணிநாத சுவாமி கோயில் பிரம்மோத்ஸவ விழாவில் தேரோட்டம் வெகு விமரிசையாக நடந்தது.

க டை ய நல் லூ ரில் அமைந்துள்ள பூமிநீளா சமேத நீலமணிநாத சுவாமி கோயில் இப்பகுதியில் மிகவும் பழமையான திருக்கோயிலாகும். நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் ஆழ்வார்களால் பாடல் பெற்ற இத்திருக்கோயிலில் ஆண்டு தோறும் சித்திரை மாதம் 12 நாட்கள் நடக்கும் பிரமோத்ஸவ திருவிழா மிகவும் பிரசித்தி பெற்றதாகும்.

இந்த ஆண்டு பிரம்மோத்ஸவ திருவிழா கடந்த 13ம் தேதி காலை கொடியேற்றத்துடன் துவங்கியது..விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் நேற்று (22ம் தேதி)நடந்தது. காலை 9 மணிக்கு சுவாமி, அம்பாள் அலங்கரிக்கப்பட்ட தேரில் எழுந்தருளினார்.

தொடர்ந்து பக்தர்கள் கோவிந்தா, கோபாலா கோஷம் முழங்க தேரினை இழுத்தனர். நான்கு ரத வீதிகளிலும் தேர் பக்தி பரவசதுட்ன் இழுத்து வரப்பட்டது. மதியம் 12மணியளவில் தேர் நிலையை அடைந்தது. தொடர்ந்து மாலை 5:30 மணிக்கு பஜனை, தேரிலிருந்து சுவாமி கோயிலுக்கு எழுந்தருளல், இரவு முத்துப் பல் லக்கு, தேர் தடம் கண்டருளல் நடந்தது. இன்று 23ம் தேதி காலை அபிஷேகம், இரவு யாகசாலை பூர்ணாகுதி, சுவாமி புறப்பாடு, தீபாராதனை, கொடி இறக்கம் நடக்கிறது. நாளை 24ம் தேதி காலை அபிஷேகம், அலங்கார தீபாராதனை, நீலமணி நாதர், சீனிவாச திருக்கல்யாணம் நடக்கிறது.

# இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளியில் உலக பூமி தின கொண்டாட்டம்

குற்றாலம் ஏப்.23:

இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளியில் உலக பூமி தினம் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு பாரத் கல்விக் குழுமத் தலைவர் மோகனகிருஷ்ணன் மற்றும் செயலாளர் காந்திமதி மோகன கிருஷ்ணன் தலைமை தாங்கினர்.முதல்வர் கிஃப்ட் சன் கிருபாகரன் முன்னிலை வகித்தார்.



மாணவி நித்ய செண்பகா தேவி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். மதுஷா மற்றும் தேவதர்ஷினி உலக பூமி தினம் பற்றி வினாடி வினா நடத்தினர். மாணவன் வேணுகோபால் திருக்குறள் வாசித்தார். ஃஸ்புல் இக்ராம் குழுவினர் நடனம் ஆடினர்.ஆலன் குழுவினர் சுத்தம் சுகம் தரும் என்ற தலைப்பில் தமிழ் நாடகம் நடத்தினர். நித்ய செண்பக தேவி நெகிழி பயன் பாட்டை தவிர்ப்பது பற்றி உரையாற்றினார். நெகிழிப் பை பயன்பாட்டை குறைத்து,மஞ்சப் பை பயன்பாட்டை அதிகரிக்க , மாணவர்களுக்கு மஞ்சப்பை அறிமுகப்படுத்தி, பூமியை பாதுகாக்க வேண்டும் என்று ஊக்கப்படுத்தினர்.உலக வெப்பமயமாதலை குறைப்பதற்காக பள்ளியில் புதிதாக மரக்கன்றுகளை பாரத் கல்விக் குழுமத் தலைவர் மோகனகிருஷ்ணன் பள்ளி மாணவர்களுடன் இணைந்து மரக்கன்றுகளை நட்டனர். மாணவி அபர்ணா பூமி தினம் கொண்டாட்டத்தின் முக்கியத்துவம் பற்றி சிறப்புரையாற்றினார். உலக பூமி தினம் கொண்டாட்டத்தை முன்னிட்டு ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு தேவையற்ற பொருள்களிலிருந்து அழகு மிகு கலைப் பொருட்களை உருவாக்குதல் ஏழாம் வகுப்பு மாணவர்களுக்கு சுவரொட்டி தயாரித்தல், எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு கட்டுரை எழுதுதல் ஆகிய போட்டியை நடத்தினர்.



●மீனாட்சி சுந்தரேஸ்வரர் பக்தர்கள் சங்க 23-வது ஆண்டு விழாவை முன்னிட்டு மதுரையில் பக்தர்களுக்கு கல்யாண விருந்து அன்னதானத்தை முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார், அம்மா சேரிடபிள் டிரஸ்ட் செயலாளர் பிரியதர்ஷினி ஆகியோர் துவக்கி வைத்தனர்.

# சாயல்குடியில் மாணவர்களுக்கான ஜெயித்து காட்டுவோம் நிகழ்ச்சி



கடலாடி ஏப்23

ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியில் அனைவரும் கல்வி கற்றுக் கொள்ள வேண்டும் கல்வி கற்றுக் கொள்ளவில்லை என்று இனி யாரும் இருக்கக் கூடாது என்ற உயரிய நோக்கத்தில் இயங்கி வரும் மனிதன் ஜி ஓ பி அறக்கட்டளை சார்பில் 12-ம் வகுப்பு முடித்த மாணவ- மாணவிகளுக்கான ஜெயித்துக் காட்டுவோம் என்ற வழிகாட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது .சாயல்குடி மற்றும் அதன் சுற்றுப்பகுதி என்பது கிராமங்கள் நிறைந்த பகுதி என்னென்ன படிப்பு உள்ளது வேலை வாய்ப்பு தரும் படிப்புகள் என்ன கல்வி உதவித்தொகை பெறுவது எப்படி? இதுபோன்ற எந்தவிதமான விழிப்புணர்வு இல்லாத நிலையில் இப்பகுதி மாணவ மாணவிகள் அனைத்து விழிப்புணர்வும் பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் இந்த விழாவை நடத்தினார். சாயல்குடி ஜமீன்தார் சிவஞான பாண்டியன் திமுக ஒன்றிய செயலாளர் குலாம் முகைதீன் ஆகியோர் தலைமை தாங்கினர். சாயல்குடி காவல் ஆய்வாளர் எஸ்தாத் சாயல்குடி பேரூராட்சி சேர்மன் மாரியப்பன் மற்றும் மாரி முத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

துணை சேர்மன் மற்றும் அனைத்து வார்டு மெம்பர்கள் மற்றும் சாயல்குடி ஜமாத் தலைவரும் முன்னாள் பேரூராட்சி தலைவருமான முகமது ஜின்னா மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் சங்கரி பேரூராட்சி வார்டு உறுப்பினர் காமராஜ் அணிபா முன்னாள் பேராசிரியர் ராஜாராம் மற்றும் அனைத்து சமுதாய தலைவர்கள் வணிக சங்கத்தைச் சார்ந்த அனைவரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை சிறப்பித்தனர் தமிழ்நாடு தனியார் பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவர் ஜெய கண்ணன் மாணவர்களுக்கு கல்வியை பற்றி விரிவுரை செய்து மாணவர்களின் சந்தேகங்களுக்கு தெளிவான முறையில் விளக்கம் வழங்கினார் . இந்நிகழ்ச்சியில் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

# தேவதாபைட்டி கல்வி பள்ளியின் மழலையர் பட்டமளிப்பு விழா




தேனி ஏப் 23

தேனி மாவட்டம் தேவதானப்பட்டியிலுள்ள கல்வி சர்வதேச பொதுப்பள்ளியில் கடந்த வாரம் மழலையர் வகுப்புகளுக்கான பட்டமளிப்பு விழா மற்றும் பள்ளியின் முதலாம் ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு கல்வி குழுமத்தின் இயக்குநர் செந்தில்ராஜ் குமார் தலைமை தாங்கினார். தலைமையாசிரியர் வெங்கடேஸ்வரி முன்னிலை வகித்தார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட கல்வி குழுமத்தின் தலைவர் செந்தில்குமார், செயலாளர் குமரேஷ் ஆகியோர் மழலையர் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி சிறப்புரையாற்றினர். இவ்விழாவை முன்னிட்டு பள்ளி மாணவ மாணவி களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இவ்விழாவில் முக்கிய பிரமுகர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை தேவதானப்பட்டி கல்வி குழும பள்ளியின் அலுவலர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

## மானாமதுரையில் சித்திரை திருவிழா

# வைகை ஆற்றில் இன்று கள்ளழகர் இறங்குகிறார்

மானாமதுரை, ஏப்23-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் புகழ்பெற்ற சித்திரை திருவிழா கடந்த வாரம் ஏப்ரல் 14ம் தேதி தொடங்கியது. முக்கிய விழாவான திருக்கல்யாணம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நேற்று தேரோட்டம் வெகு விமர்சியாக நடைபெற்றது.இன்று வைகை ஆற்றில் கள்ளழகர் இறங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.ஆனால் பொது மக்களுக்கு தேவையான குறிப்பாக பெண்களுக்கு கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. இதனால் திருவிழா வுக்கு வருகை தந்த பெண்கள் கடும் பாதிப்படைந்தனர்.கடந்த காலங்களில் நகராட்சி சார்பில் நடமாடும் கழிப்பறை வசதிகள் அமைக்கப்பட்டது.ஆனால் தற்போது கழிப்பறை வசதிகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. திருவிழாவில் அமைக்கப்படும் கடைகளுக்கு வரி வசூல் செய்வதில் ஆர்வம் காட்டும் மானாமதுரை நகராட்சி நிர்வாகம் பொது மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை கூட செய்வதில்லை என பெண்கள் புலம்பி வருகின்றனர்.

# ஒட்டன்சத்திரத்தில் வாழை இலை கடும் விலை உயர்வு




ஒட்டன்சத்திரம் ஏப்..23.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் பகுதியில் கடும் வெயில் காரணமாக வாழை இலை பல மடங்கு விலை உயர்ந்துள்ளது.

ஒட்டன்சத்திரம் பகுதியில் 20க்கும் மேற்பட்ட வாழை இலை விற்பனை கடைகள் உள்ளது. இந்த கடைகளுக்கு விற்பனைக்காக மதுரை, சோழவந்தான், வாடிப்பட்டி, வத்தலக்குண்டு, பெரியகுளம், தேனி, கம்பம், போடி உள்ளிட்ட பகுதியிலிருந்து வாழை இலை விற்பனைக்காக கொள்முதல் செய்யப்படும். கடந்த மாதங்களில் 200 எண்ணிக்கை கொண்ட ஒரு கட்டு வாழைஇலைரூ.700 க்கு விற்பனையானது. தற்பொழுது கடும் கடும் வெயில் காரணமாக வரத்து குறைவாகவே விற்பனைக்கு கொண்டுவரப்படுகிறது .இதனால் 200 எண்ணிக்கை கொண்ட ஒரு கட்டு வாழை இலை ரூ.2000க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து வாழைஇலை வியாபாரி கூறுகையில், வரும் நாட்கள் முகூர்த்த நாட்கள் சித்திரைத் திருவிழா நடைபெற உள்ளதால் வாழைஇலையின் தேவைகள் அதிகளவு உள்ளது. ஆனால் கடும் வெயில் மற்றும் மழையின்மை காரணமாக காரணமாக விற்பனைக்கு கொள்முதல் செய்யப்படும் வாழை இலை எண்ணிக்கை குறைந்த அளவே வருகிறது. இன்னும் சில மாதங்களுக்கு இந்த விலை உயர்வு இருக்கும் என்று வியாபாரிகள் கூறினர்

# மார்ச் 31, 2024 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டு முடிவிற்கான நிதி முடிவுகள் : இந்திய ஜிஏஏபி

சென்னை, ஏப் 23-

சனிக்கிழமையன்று மும்பையில் நடைபெற்ற கூட்டத்தில், எச்டிஎஃப்சி பேங்க் லிமிடெட்டின் இயக்குநர்கள் குழுவானது மார்ச் 31, 2024 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டு முடிவிற்கான வங்கி (இந்திய ஜிஏஏபி) முடிவுகளை அங்கீகரித்தது. வங்கியின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்களால் கணக்குகள் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. ஒருங்கிணைக்கப்பட்ட நிதி முடிவுகள்:மார்ச் 31, 2023 அன்று முடிவடைந்த காலாண்டில் ரூ.345.5 பில்லியனாக இருந்த வங்கியின் ஒருங்கிணைந்த நிகர வருவாய் 133.6% அதிகரித்து மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த காலாண்டின்போது ரூ. 807.0 பில்லியனாக இருந்தது. மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த காலாண்டில் வரிக்குப் பிந்தைய ஒருங்கிணைந்த லாபமானது, மார்ச் 31, 2023 அன்று முடிவடைந்த காலாண்டில் இருந்து தொடங்கி 39.9% அதிகரித்து ரூ. 176.2 பில்லியன் ஆக உள்ளது. மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த காலாண்டில் ஒரு பங்கின் வருவாய் ரூ. 23.2 ஆகவும், மார்ச் 31, 2024 நிலவரப்படி ஒரு பங்கின் புத்தக மதிப்பு ரூ. 600.8 ஆகவும் இருந்தது.மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்குப் பிந்தைய ஒருங்கிணைந்த லாபம் மார்ச் 31, 2023 அன்று முடிவடைந்த ஆண்டில் இருந்து 39.3% அதிகரித்து தற்போது ரூ. 640.6 பில்லியனாக உள்ளது.

எச்டிஎஃப்சி அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட் (எச்டிஎஃப்சி ஏஎம்சி), இதில் வங்கி 52.6% பங்குகளைக் கொண்டுள்ளது. எச்டிஎஃப்சி ஆனது மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளராக உள்ளது.இது இந்தியாவின் மிகப்பெரிய மியூச்சுவல் ஃபண்டுகளில் ஒன்றாகும், மேலும் இது சேமிப்பு மற்றும் முதலீட்டுத் தயாரிப்புகளின் விரிவான தொகுப்பை வழங்குகிறது. மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த காலாண்டில், எச்டிஎஃப்சி ஏஎம்சி நிறுவனத்தின் காலாண்டு சராசரி சொத்துகளின் மதிப்பு சுமார் ரூ. 6,129 பில்லியனாக இருந்தது.இது மார்ச் 31, 2023 அன்று முடிவடைந்த காலாண்டில் இருந்து 36.3% வளர்ச்சியைக் காட்டுகிறது. மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த காலாண்டில் வரிக்குப் பிந்தைய லாபம் ரூ. 5.4 பில்லியனாக இருந்தது, இது மார்ச் 31, 2023 அன்று முடிவடைந்த காலாண்டின்போது ரூ. 3.8 பில்லியனாக இருந்து தற்போது 43.8% வளர்ச்சியடைந்துள்ளது. மார்ச் 31, 2023 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்குப் பிந்தைய லாபம் ரூ. 14.2 பில்லியனுடன் ஒப்பிடும்போது மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்குப் பிந்தைய லாபம் ரூ. 19.5 பில்லியனாக உள்ளது.

# 55 வயதான நபருக்கு மீண்டும் கருவிழிப்படலத்தில் உணர்திறனை வழங்கிய சங்கரா கண் மருத்துவமனை

கோவை, ஏப் 23-

தமிழ்நாடு மாநிலத்தின் மேற்கு பிராந்தியத்தில் கண் சிகிச்சை பராமரிப்பில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் நிகழ்வாக, கருவிழிப்படல உணர்திறன் இழப்பால் அவதியுற்ற 55 வயதான ஒரு ஆண் நோயாளிக்கு வெற்றிகரமான சிகிச்சையின் மூலம் கோயம்புத்தூர் சங்கரா கண் மருத்துவமனை குணப்படுத்தியிருக்கிறது. கருவிழிப்படலத்தில் திரும்பத்திரும்ப புண் ஏற்பட்டதாலும் மற்றும் பல்லை அகற்றியதற்கு பிறகு தோலின் மேற்புற செல் சிதைவினாலும், கடுமையான வலி மற்றும் பகல் வெளிச்சத்தை பார்க்க இயலாமல் கண் கூசும் பிரச்சனை ஆகிய தினசரி சவால்களை வெங்கடேஷ் என்ற நபர் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) எதிர்கொள்ள வேண்டியிருந்தது. கோயம்புத்தூர் - சங்கரா கண் மருத்துவமனையின் தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர். ஸ்ருதி தாரா, நான்கு மணி நேரம் நடைபெறுகிற இந்த சிகிச்சை செயல்முறையில் நோயாளியின் தொடைப்பகுதியிலிருந்து கெண்டை நரம்பின் ஒரு பகுதி எடுக்கப்பட்டு நெற்றியின் சிதையாத, முழுமையான நரம்போடு ஒட்டி இணைக்கப்படுகிறது. ஒட்டி இணைக்கப்பட்ட இந்த நரம்பு அதன்பிறகு கருவிழிப்படலத்தைச் சுற்றி உட்செலுத்தப்படுகிறது.

உணர்திறன் இணைப்புகளின் மறுஉருவாக்கத்தை ஏதுவாக்கும் இது, கருவிழிப்படல உணர்திறனை மீண்டும் கொண்டு வருகிறது.வெங்கடேஷ் என்ற இந்நோயாளியின் கருவிழிப்படல புண் ஆறி இப்போது குணமடைந்து வருவதால் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அவர் கண்டிருக்கிறார். பாதிப்பிற்கு முந்தைய முழு இயல்பு நிலைக்கு வருவதற்கு ஏறக்குறைய 6 மாதங்கள் ஆகும். புரட்சிகரமான இம்மருத்துவ செயல்முறையானது.இதுபோன்ற நோயாளிகளுக்கு குணமடைதலுக்கான நம்பிக்கையை வழங்குகிறது.அதுமட்டுமன்றி எதிர்காலத்தில் கருவிழிப்படல மறுசீரமைப்பு சிகிச்சைகளுக்கும் வழிவகுக்கிறது என்று டாக்டர் ஸ்ருதி மேலும் விளக்கமளித்தார்.

# தேர்தல் பணிக்காக கேரளா செல்லும் விருதுநகர் போலீஸ்

விருதுநகர் ஏப். 23.

கேரளாவில் உள்ள 20 லோக்சபா தொகுதிகளுக்கு ஏப்ரல் 26 ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது. இதற்காக பாதுகாப்பு பணிக்கு தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் போலீசார் அழைக்கப்பட்டுள்ளனர். அதன்படி விருதுநகர் மாவட்டத்தில் இருந்து கேரளா லோக்சபா தேர்தலுக்கு 30 போலீசார் மட்டுமே தேவை உள்ளது. ஆனால் கேரளா செல்ல பல போலீஸ்சார் மிகுந்த ஆர்வத்துடன் போட்டி போட்டு கேரளா செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர். என் பேரு குறிப்பிடத்தக்கது.

# டி.கல்லுப்பட்டி புதுமாரியம்மன் கோவிலில் புதுமையான மாறுவேட திருவிழா

## விநோத வேடங்களில் வந்து பக்தர்கள் நேர்த்திக்கடன்

திருமங்கலம்.ஏப்ரல்.23.

மதுரை மாவட்டம்,டி.கல்லுப்பட்டியிலுள்ள அருள்மிகு புதுமாரியம்மன் கோவிலில் நடைபெற்ற சித்திரை திருவிழாவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் பல்வேறுவிதமான மாறுவேடங்களில் வந்து நேர்த்திக்கடன் செலுத்திய நிகழ்வு பார்வையாளர்களை பரவசத்தில் ஆழ்த்தியது.



திருமங்கலம் அருகேயுள்ள டி.கல்லுப்பட்டி, மெயின்ரோட்டில் 300ஆண்டுகால பழமைவாய்ந்த அருள்மிகு புதுமாரியம்மன் கோவில் உள்ளது.இங்கு ஆண்டுதோறும் சித்திரைதிருவிழா வெகுசிறப்பாக கொண்டாடப்படுவது வழக்கம்.இந்நிலையில் டி.கல்லுப்பட்டி அருள்மிகு. புதுமாரியம்மன்கோவிலின் சித்திரை திருவிழா வழக்கமான உற்சாகத்துடன் கோலாகலமாக நடைபெற்றது. இவ்விழாவின் முக்கியநிகழ்வாக நேற்று மாலை ஆயிரக் கணக்கான பக்தர்கள் பல்வேறுவேடங்களில் வந்து ஆடிப்பாடியபடி வீதிகளில் உலா வந்து நேர்த்திக்கடன் செலுத்திடும் முக்கிய நிகழ்ச்சி நடைபெற்றது.



அப்போது டி.கல்லுப்பட்டி மற்றும் சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தேவலோக கடவுளர்கள்,பழங்கால அரசர்கள்,அசுரர்கள், ராட்சதர்கள்,பேய்,பிசாசுகள், அரக்கிகள்,வேற்று கிரக மனிதர்கள், பிச்சைக்காரர்கள், வெளிநாட்டு இன்னிசை குழுவினர் மற்றும் பெண்கள் போன்று வேடமிட்டு வீதிகளில் ஆடிப்பாடியபடி ஊர்வலமாக வந்து புதுமாரியம்மன் கோவிலில் வழிபாடு நடத்தி தங்களது நேர்த்திக்கடனை செலுத்தி வழிபட்டனர். இதையடுத்து விழாவின் நிறைவாக மாட்டு வண்டியில் சீர்வரிசை சாமான்கள் ஏற்றப்பட்டு புதுப்பொண்ணு மாப்பிள்ளை வண்டி ஊர்வலம் நிகழ்ச்சி நடைபெற்றது.அப்போது அலங்கார வண்டிகளில் பல்வேறு மேலோக நிகழ்வுகளை விளக்கிடும் கடவுளர்களது காட்சி,முனிவர்கள் தவம் செய்வது,இதிகாச நிகழ்வுகள் போன்ற காட்சிகளுடனான ஊர்வலம் கோவிலை வந்தடைந்தது.அதன்பின்னர் கோவிலில் வேண்டுதல் நிறைவேறிய 500க்கும் மேற்பட்டோர் பூக்குழி இறங்கி சாமிதரிசனம் செய்து வழிபாடு நடத்தினார்கள்.பிறகு ஆயிரக்கணக்கான பெண்கள் மாவிளக்கு எடுத்து வந்து பூஜைகள் மேற்கொண்டனர். குலசேகரபட்டினம் தசரா திருவிழா போல் நடைபெற்ற இந்த புதுமையான புதுமாரியம்மன் கோவில்விழாவில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு பக்தர்களின் மாறுவேடங்களை மகிழ்வுடன் ரசித்ததுடன் கோவிலில் வழிபாடும் நடத்திச் சென்றனர்.இந்த திருவிழாவின்போது டி.கல்லுப்பட்டியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதால் போலீசார் வாகனங்களை மாற்றுப்பாதையில் திருப்பிவிட்டு பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டனர்.

# உச்சப்பட்டி இலங்கை தமிழர்கள் முகாம் அருள்மிகு சித்தி விநாயகர் கோவில் மகா கும்பாபிஷேக விழா

திருமங்கலம். ஏப்.23.

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே உள்ள உச்சப்பட்டி இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் அமைந்துள்ள சித்தி விநாயகர் திருக்கோவில் மகா கும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றது.

உச்சப்பட்டியில் அமைந்துள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் அருள்மிகு சித்தி விநாயகர் கோவில் அமைந்துள்ளது.இந்த கோவிலின் மகா கும்பாபிஷே விழா நேற்று காலை மேளதாளங்கள் மற்றும் வேத மந்திரங்கள் முழங்கிட சிறப்பாக நடைபெற்றது.

அப்போது சித்தி விநாயகர், ஆதிரேஸ்வரர், வீரஆஞ்சநேயர், கதிர்வேல கந்தன், தர்ம சாஸ்தா ஐய்யப்பன், கால பைரவர், முனியாண்டி மற்றும் கருப்பசாமி உள்ளிட்ட அனைத்து பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு அலங்கார அபிஷேகத்துடன், கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டது.

இதையொட்டி கடந்த 20-ந்தேதி மங்கல இசையுடன் அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, மகா கணபதி ஹோமமம், வாஸ்து சாந்தி பூஜை மற்றும் முதல் கால யாக சாலை பூஜை ஆரம்பமானது.

அன்று இரவு 8 மணி அளவில் பூர்ணாகுதி, தீபாராதனை நடைபெற்றது. இதனை தொடர்ந்து இரண்டாம் கால, மூன்றாம் கால, நான்காம் கால யாக பூஜை நடைபெற்று மேள தாளங்களுடன் வேத மந்திரங்கள் முழங்கிட புனித நீரை யாகத்தில் இருந்து சிவாச்சாரியார்கள் ஊர்வலமாக எடுத்து வந்து கோபுர கலசத்தில் ஊற்றி கும்பாபிஷேகத்தை நடத்தினர்.

இதில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து வழிபாடு செய்தனர். அதனைத் தொடர்ந்து சித்தி விநாயகர் ஆலய நிர்வாக சபையின் சார்பாக கும்பாபிஷேக விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.



●சித்திரை திருவிழாவை முன்னிட்டு தேரோட்டத்தை காண வந்த பக்தர்களுக்கு அண்ணா தொழிற்சங்க மண்டல துணைச் செயலாளர் பி.ஆர்.சி. திருமுருகன் ஏற்பாட்டில், அண்ணா தொழிற்சங்க மாவட்ட செயலாளர் சக்தி விநாயகர் பாண்டியன் நீர்,மோர், குளிர்பானங்கள் வழங்கி தொடங்கி வைத்தார். அருகில் தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் குடும்பத்தினர் உள்ளனர்.



●வைகை ஆற்றில் இறங்க வருகை வருகை தரும் கள்ளழகருக்கு எதிர்சேவை நிகழ்ச்சியின் போது வெயிலின் தாக்கத்திலிருந்து பக்தர்களை பாதுகாத்துக் கொள்ளும் விதமாக ரிசர்வ் லைன் மாரியம்மன் கோவில் பகுதியில் வெரிடாஸ் ஃபைனான்ஸ் நிறுவனம் சார்பில் தண்ணீர் பாட்டில் மற்றும் கை விசிறி வழங்கப்பட்டது.

